(ii) ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லாமை.

திரு. சு. துரைசாமி : சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

"தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருத்துவ மனைகளிலும் மொத்தமாக 250-க்கு மேற்பட்ட மருத்துவர்கள் (டாக்டர்கள்) இல்லாத குறையினால் மருத்துவ மனைகளில் இடங்கள் காலியாக இருப்பதும் அதனால் பொதுமக்கள் கஷ்டங்கள் அடைந்து வருவதுமான நிலை."

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Deputy Speaker Sir, on 12th August 1968 114 posts of Medical Officers were vacant as indicated below :—

1. Hospitals and Dispensaries—	
Men	41
Women	37
2. Primary Health Centres	12
3. E.S.I. Hospitals and Dispensaries in city and mofussil.	24
Total ..	114

At present out of 287 Primary Health Centres in the State, only 12 posts of Medical Officers in Primarary Health Centrse are vacant. The vacancies are due to—

(i) Medical Officers being deputed for higher studies like M.D., M.S., condensed M.B.B.S. course, etc., and Diplomas like D.O., D.L.O., D. V., etc.

(ii) Medical Officers proceeding on leave on medical grounds and on private affairs ; and

(iii) Medical Officers being posted but not joining duty owing to a variety of reasons.

The vacant posts are being filled up as and when Medical Officers become available. The Government have since approved the proposal of the Director of Health Services and Family Planning for appointment of 93 candidates as temporary Assistant Surgeons in the Madras Medical Service. Therefore only 21 vacancies still remain to be filled up. Necessary action will be taken to fill up these vacancies, as quickly as possible.

திரு சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதால், மெடிகல் லீவு போட்டுவிட்டு இதர இடங்களுக்கு முயற்சிப்பதால், இந்த வேலைக்குப் போகாமல் இருப்பதால், பொதுமக்கள் வெகு சிரமப்படுகிறார்கள். அப்படி மாற்றல் செய்யப்படும் போது, வேலைக்குச் சேராத டாக்டர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, வேலைநீக்கம் செயயும் அளவிற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் சொல்லுவதுபோல வேலைநீக்கம் செய்ய வேண்டிய நிலை இல்லை. மாற்றம் செய்யப்படும் போது, அவசியத்திற்கு லீவு எடுக்கிறார்கள். உறுப்பினர் களைப் போன்றவர்கள் ஒத்துழைத்தால்நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன்.